# புனித யூதாதேயுவின்
# செபங்களும் மன்றாட்டுக்களும்



அரியாலை, யாழ்ப்பாணம்,

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான
அரியாலை
புனித யூதாததேயுவின்

# செபங்களும் மன்றாட்டுக்களும்



அரியாலை, யாழ்ப்பாணம்.
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய யூதா ததேயுவின் சுருக்கமான வரலாறு

தூய யூதா ததேயு யேசுவின் ஒன்றுவிட்ட சகோதரர் என்பது நற்செய்தியும், பாரம்பரியமும் சொல்லுகின்ற உண்மையாகும். அதாவது இவர் குளோப்பாவினதும், யேசுவின் தாய் மரியாவின் சகோதரியாகிய மரியாவினதும் மகனாவார். சின்ன யாக்கோபு, சீமோன், யோசே ஆகியோரின் சகோதரர் ஆவார். இவ்வாறு திருக்குடும்பமாகிய யேசு, மரியா, யோசேப்பு ஆகியோரின் இரத்த உறவினரான யூதா ததேயு நம் மீட்பராம் யேசுவின் சிறுபிராய நண்பரும் ஆவார். தமது இளமைப் பருவத்தில் இயேசுவோடு உண்டு, உறவாடி நெருக்கமாகப் பழகியவர். இவர் எப்போது, எவ்வாறு யேசுவின் திருத்தூதர் ஆனார் என்பது தெரியாது. நற்செய்திகளிலே திருத் தூதர்களின் பெயர்ப் பட்டியல் சொல்லப்படுமுன் தூய யூதாவைப் பற்றி எதுவும் சொல்லப் படவில்லை. ஆனால் இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களுள் ததேயுவும் ஒருவர் என்று நற்செய்தி ஆசிரியர்களான மத்தேயுவும் (10:33), மாற்குவும் (3:11) ஆணித்தரமாகச் சொல்கின்றனர். இறுதி இரவுணவின் பின் தம்மை அன்பு செய்பவருக்கே யேசு தம்மை வெளிப்படுத்துவேன் என்று கூறியபோது, தூய யூதா, ஏன் உலகத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத் தம்மை வெளிப்படுத்தவில்லை என்று யேசுவைக் கேள்வி கேட்டார் (யோவா 14:22).

இதிலிருந்து பெரும்பான்மையான யூதர்கள் எதிர்பார்த்ததைப் போன்று, அவருடைய மெசியா அரசின் எதிர்பார்ப்பும் உலகியல் சார்ந்தது போன்றதே என்று எண்ணத் தோன்றுகின்றது. ஆனால் இறை வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள உலகம் தகுதியடைவதாக இல்லை. அது விண்ணகக் கூட்டுறவுக்கு அந்நியமாகவும், எதிரியாகவும் இருக்கின்றது. ஆனால் தம்மை உண்மையாகவே அன்பு செய்பவரைத் தாமும் மகிமைப்படுத்தி, இறை உறவில் வாழச் செய்வேன் என்று யேசு கூறிய பதில் தூய யூதாவை அமைதிப்படுத்துகின்றது.

## தூய யூதா ததேயுவின் பெயர்

தூய யூதா ததேயு துரோகியாக மாறிய யூதாசு இஸ்காரியோத்து அல்ல என்பதை நான்கு நற்செய்திகளும் தெளிவுபடுத்துகின்றன. தூய யூதா ததேயு தமது பெயராலேயே யூதாசு இஸ்காரியோத்துவிலிருந்தும் வேறுபடுகின்றார். சிரிய மொழியிலே தயேயுஸ் (Thaddaeus) என்னும் சொல் 'புகழ்ச்சி' அல்லது 'விசுவாசத்தை அறிக்கை யிடல்' என்ற கருத்தையும், யூதா என்ற சொல்லைக் குறித்து நிற்கின்ற 'லெபாயுஸ்' (Lebbaeus) என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எபிரேய மொழிச் சொல் 'புரிந்து கொள்ளும் மனிதர்' (a man of wit and understanding) என்ற கருத்தையும் 'Leb' என்ற கிரேக்கச் சொல் 'இதயம்' என்ற கருத்தையும் குறித்து நிற்கின்றன. தம் பெயருக்கேற்றவாறே புனிதரும் தம்மை அண்டி வரும் பக்தர்களின் தேவைகளை நன்குணர்ந்து', விரைந்து, உதவி செய்யும் உளப்பாங்கைக் கொண்டவராக விளங்குகின்றார். அது மாத்திர மன்றி, ஆபத்துக் காலங்களில் தம்மை நோக்கி மன்றாடுபவர்களுக்கு ஏற்ற தருணத்தில் உள்ளன் போடு விரைந்தோடிச் சென்று, உதவி செய்பவராக வும் திகழ்கின்றார்.

## "கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர்"

கிறிஸ்தவ ஆரம்பகாலந் தொட்டே, தூய யூதா ததேயு வெகு கஸ்டமான நேரங்களில் நிச்சயம் உதவி செய்கின்றவராகப் பெரும் புகழ் அடைந்திருக்கின்றார். அவருடைய பரிந்துரையால் அநேக விசுவாசிகளுடைய வேண்டுதல்கள் வெகு சீக்கிரத்திலும், ஆச்சரியத்துக்குரிய விதத்திலும் கிடைக்கப்பெற்றன. தூய பிறிசித்தம்மாள், புனித பெர்னனாந்து போன்ற பல புனிதர்கள் தூய யூதா ததேயுவை நோக்கி வேண்டிய போது, அவருடைய பரிந்துரையினால் அப் புனிதர்களின் மன்றாட்டுக்கள் கேட்கப்பெற்று அவர்கள் தேவைகள் நிறைவேற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றன என்பது வரலாறு சொல்கின்ற உண்மைகளாகும். எவ்வித வைத்திய சிகிச்சைக்கும் குணப்படாத நோய்கள், பல்வேறு கஷ்ட நஷ்டங்களால் ஏற்படும் நொந்தரவுகள், அதனால் ஏற்படும் மனக்கவலைகள், மனவெறுப்புகள், "யாதொரு வழியுமில்லையே" என்று அங்கலாய்த்துத் திக்குமுக்காடித் தவிக்கும் தருணங்களில் தூய யூதா ததேயுவை நோக்கி நம்பிக்கையுடன் மன்றாடியவர்களுக்கு ஆச்சரியத்துக்குரிய விதமாய், விரைந்தோடிச் சென்று அவர் உதவி செய்வதைப் பார்க்கும் போதும், கேட்கும்போதும் நம் உடல் பூரிப்படைகிறது. தூய யூதா ததேயுவின் வல்லபமிக்க பரிந்துரையை நம்பி அவரது உதவியை நாடி வந்து, இல்லையென்று வெறும் கையராய்த் திரும்பிச் சென்றவர்கள் இல்லையென்றே சொல்ல வேண்டும். இதனாலேயே தூய யூதா ததேயு "கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர்" என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்றார்.

## தூய யூதா ததேயுவின் பணிவாழ்வு

யேசுவின் விண்ணேற்றத்தின் பின்பு, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட தூய யூதா ததேயு, இறைவார்த்தையை ஆயுதமாகத் தாங்கிக் கொண்டு, தூய ஆவியின் வல்லமையோடு இருளின் ஆட்சியைத் தோற்கடிக்கும் நற்செய்தி அறிவிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியைத் தொடங்குகின்றார். இவரது பணியைப் பற்றி எயூசேபியுஸ் குறிப்பிடுகையில்: தூய யூதா ததேயுவைப் புனித தோமையார் எதெஸ்ஸா (Edessa) என்ற இடத்திற்கு அனுப்பினார் என்றும் அங்கேயிருந்த அப்கர் அரசனையும், பெருந் தொகையான மக்களையும் மனம் மாற்றிப் தூய யூதா ததேயு தமது கையாலேயே அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்தார் என்றும் கூறுகின்றார்.

யூதேயா, இதுமேயா, சிரியா, மெசப் பத்தாமியா ஆகிய இடங்களிலே சொல்லொணாக் கஸ்டங்களின் மத்தியிலே தூய யூதா ததேயு கிறிஸ்தவ அன்பின் அழகைப் பற்றி நற்செய்தி அறிவித்தார் என்று திருச்சபையின் பாரம்பரியம் சொல்கின்றது. தூய யூதா ததேயு லிபியாவிலே விசுவாச விதைகளை விதைத்தார் என்று புனித பவுலினஸ் கூறுகின்றார். மெசொப்பத்தாமியாவில் நற்செய்தி அறிவித்த தூய யூதா ததேயு அங்கிருந்து பேர்சியா செல்ல நேர்ந்தது என்றும் அங்கேயே அவர் வேதசாட்சிய மரணம் அடைந்தார் என்றும் மேற்கத்தைய வேதசாட்சிகளின் வரலாறு (Western Martyrology) கூறுகின்றது.

தூய யூதா ததேயுவிடம் காணப்பட்ட அப்போஸ்தலிக்க ஆர்வம் வேத விரோதிகளை அவருக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்தது. கோபாவேஷம் கொண்ட அவ்விரோதிகள் தூய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதா ததேயுவின்மேற் பாய்ந்து, அவரை அறிவு மயங்கும் வரை அடித்து, ஈற்றில் அவரின் தலையை ஒரு பாரிய கோடரி கொண்டு வெட்டினர். இதனாலேயே ஒரு தடியைத் தாங்கியவராகப் தூய யூதா ததேயு எப்போதும் சித்தரிக்கப்படுகின்றார்.

மேலும், ஆர்மீனியா பார்த்தியன் பேரரசனின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் பேர்சியா ஆர்மீனியாவின் முக்கிய பகுதியாக விளங்கியது. அப்போது பேர்சியாவில் ஆர்ற் என்னும் இடத்திலே தூய யூதா ததேயு நற்செய்தி அறிவித்துக் கொண்டிருந்த வேளையிலேயே அம்புகளால் எய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்று பசில் பேரரசனின் புனிதர்கள் பட்டியல் கூறுகின்றது. அங்கே அவர் சிலுவையிலே கட்டப்பட்டு, அம்புகளால் எய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்று கூறுகின்ற கிரேக்கர்களும் இருக்கின்றார்கள். ஆர்மீனியர்களின் பெரு வணக்கத்துக்குரிய ஒரு புனிதராகப் தூய யூதேயு இந்நாள் வரை விளங்கி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநாள் மன்றாட்டு

முத : தந்தை மகன் தூய அவியின் பெயராலே, ஆமென்.

(தூய ஆவியை வேண்டிப் பாடல்)

முத : ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே!

எல் : நீர் பூலோகத்தில் வாழ்ந்த நாட்களிலே, உரத்த சத்தத்தோடும், கண்ணீரோடும், விண்ணப்பங்களையும் மன்றாட்டுக்களையும் உமது பிதாவுக்கு ஒப்புக் கொடுத்தீரே (எபி 5:7) இப்போது நாங்கள் ஒப்புக்கொடுக்கும் இந்த நவநாளை ஏற்றுக் கொள்ளும். இந்நவநாள் பக்தி முயற்சி மூலமாக உதவி கேட்டவர்களுக்காகவும், இதைப் பரப்புவதற்காக முயற்சி எடுப்பவர்களுக்காகவும், எமது ஆத்தும சரீர நன்மைகளுக்காகவும், விசேஷமாய்.... (சொந்தத் தேவைகளை நினைத்துக்கொள்ளவும்) (சிறிது மௌனத்தின் பின்) இந்த என் கருத்துகளுக்காகவும் உம்மோடு சேர்ந்து மன்றாட விரும்புகிறேன்.

இந் நவநாளை, உமது தாயும் எமது தாயுமாகிய பரிசுத்த கன்னி மரியாள் மூலமாக ஒப்புக் கொடுக்கின்றேன். ஏனெனில், அவள் கிறிஸ்தவர்களின் சகாயமாக விளங்குகிறாள். மேலும், உமது நெருங்கிய உறவினரான தூய யூதா ததேயு மூலமாகவும் ஒப்புக் கொடுக்கின்றேன். ஏனெனில் அவர் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராய் விளங்குகிறார். அவரோடு சேர்ந்து நாங்கள் சொல்லும் செபத்தை ஏற்றுக்கொண்டு நீர் மீட்டெடுப்பதற்காக உமது உயிரை தியாகம் செய்த ஆத்துமாக்களுக்கும் இவை பயனுள்ளதாக செய்தருளுவீராக. ஆமென்.

முத : ஓ! மகிமையுள்ள திருத்தூதரான
தூய யூதா ததேயுவே!

எல் : கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரே! உண்மை விசுவாசத்திற்காகச் சாட்சியம் பகர இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதை மறுதலிப்பதை விட எல்லாவித வாதைகளையும் அனுபவித்து, இரத்தம் சிந்திக் கடைசியில் உயிரையே தியாகம் செய்தவரே! எந்நேரத்திலும் எச்சந்தர்ப்பத்திலும், நாங்களும் விசுவாசத்தை அறிக்கையிடத் தயாராயிருக்கவும், எமக்கும் அதே போன்ற உறுதியான விசுவாசத்தைப் பெற்றுத் தாரும். உலகத்திற்கும், எமக்கும் நாம் மரித்தவர்களாய், இறைவனிடத்தில் மாத்திமே நாம் வாழ்கின்றவர்களாய், முடிவில்லாப் பரகதிக்குப் பங்காளிகளாகத் தக்கததாகவும், தவத்தால் நம் சரீரத்தை ஒறுத்து நடக்கவும் அன்புள்ள புனிதரே எமக்கு அருள் புரியும். (1பர., பிரி., திரி. புகழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத : ஓ! மகிமையுள்ள திருத்தூதரே!
எல் : தூய யூதா ததேயுவே! மீட்பரின் நெருங்கிய உறவினரே, உமது சமயத்தையும், விசுவாசத்தையும், இறைவனையும் மறுதலிப்பதிலும், உயிர் துறப்பது மேன்மையானது எனக் கருதிய, உமது மேன்மையுள்ள தைரியத்தின் மூலம், நாமும் தேவகட்டளைகளுக்கும் மனச்சாட்சிக்கும் மாறாக நடப்பதை விட, எவ்வித சித்திரவதையையும் ஏற்றுக்கொள்வதற்கு, எப்பொழுதும் தயாராயிருக்க வரம் பெற்றுத் தந்தருளும். நீதிமான்களின் அரசிலே நாமும் ஒரு பங்கடையத் தக்கதாக சீவிக்க எமக்கு உதவி செய்தருளும். (1பர., பிரி., திரி. புகழ்)

முத : ஓ! மகிமையுள்ள திருத்தூதரே!
எல் : தூய யூதா ததேயுவே! எல்லாவற்றிலும் இறைவனைத் திருப்திப்படுத்துவதே உமது ஒரே ஆசையாய் இருந்தது. எனக்கும் அதேவித ஆசையைப் பெற்றுத்தாரும். நாமும் அதே ஆர்வத்தாற் பற்றியெரிந்து தேவகட்டளைகளை அனுசரிப்பதிலும் எமது மீட்பின் அலுவலைச் செய்து முடிப்பதிலும் எமது வாழ் நாட்களைக் கழிக்கவும், இறைவனுக்காகவும், நமது பரிசுத்த விசுவாசத்திற் காகவும் எல்லாவித வாதைகளையும் பொறுமை யோடு சகித்துக் கொண்டு அதனால் பெரும் துன்பம் என்னும் தீயினால் சுத்திகரிக்கப்பட்டு, இறைவனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய அரசிலே முடிவில்லாத மகிமைப் பேற்றுக்கு உரிமையாளராகும் படியும் எமக்கு வரம் பெற்றுத் தந்தருளும். (1பர., பிரி., திரி. புகழ்)

முத : இயேசு கிறிஸ்துவின் திருவாக்குத் தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரராய் இருக்கத் தக்கதாக

எல் : தூய யூதா ததேயுவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

முத : இறைவா! உம்முடைய திருத்தூதரான தூய யூதா ததேயு மூலம் உமது திரு நாமத்தை நாம் கண்டறிய அருள் கூர்ந்தருளினீரே. அவருடைய முடிவில்லா மகிமையைப் புண்ணிய பலனுடன் கொண்டாடவும், அதன் மூலம் புண்ணிய பலன்களை அடையவும், எங்களுக்கு அனுக்கிரகம் செய்தருளும். இந்த வேண்டுதல்களை எல்லாம் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

**துன்ப வேளையில்**

முத : அதி பரிசுத்த தீருத்தூதரே!

எல் : தூயய யூதா ததேயுவே! இயேசு நாதருடைய நெருங்கிய உறவினரே! புண்ணியங்க ளாலும் புதுமைகளாலும் நிறைந்து புகழ்பொங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத சாட்சியே! உம்மை வணங்கி உம்மில் நம்பிக்கை வைப்போருக்குத் தாமதியாது பரிந்து பேசும் பரிசீலரே! பெரும் துன்பத்திலுள்ளோருக்குப் பாதுகாவலரும், வல்லபமுள்ள துணைவருமாயிருக் கிறவரே! நான் உமதண்டை வந்து என் முழு இருதயத்தோடு ஆவலாய் இரந்து மன்றாடுகிறேன். இனி எவ்வித நம்பிக்கையும் இல்லை என்று தவிக்கும் வேளையில், தப்பாது உதவி புரிந்து தற்காக்கத் தேவரீரிடம் விசேட வரம் பெற்றுத் திகழ்பவரே! உமது வல்லபமிக்க மன்றாட்டால் எனக்கு உதவி புரிய விரைந்துவாரும். என் பரிதாப நிலையைப்பாரும், என் வாழ்விலே சிலுவைகள் நிறைந்திருக்கின்றன. தேவ பராமரிப்பை என் கண்கள் இனிக் காணமுடியாது போலும், என் இருதயத்தில் விசுவாசம் தளர்கின்றது போலும் இருக்கின்றது. இக்கவலைகளின் சுமையால் நசுக்கப்பட்டு, இருண்ட மேகம் என்னைச் சூழ்ந் திருப்பது போல் நான் என்னைக் காண்கின்றேன். இந்த என் பரிதாப நிலையில் நீர் என்னைப் புறக்கணிக்கவே முடியாது. நீர் என் மன்றாட்டை கேட்குமட்டும் நான் உம்மண்டையை விட்டு விலக வேமாட்டேன். எனக்கு உதவி செய்ய விரைந்து வாரும். என் வாழ் நாள் எல்லாம் நான் உமக்கு நன்றி செலுத்துவேன். என் விசேஷ பாதுகாவலராக நான் உம்மை மகிமைப்படுத்துவேன். உமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளப்பட்ட வரங்களுக்காக இறைவனுக்கு நான் நன்றி செலுத்தி, உமது மகிமையைப் பரப்ப என் முழுச் சக்தியோடு பிரயாசைப்படுவேன் என்றும் வாக்குப்பண்ணுகிறேன. ஆமென்.

தூய யூதா ததேயுவே! இயேசு
கிறிஸ்துநாதரின் நெருங்கிய உறவினரே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

தூய யூதா ததேயுவே! திருத்தூதரும்
வேத சாட்சியுமானவரே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

தூய யூதா ததேயுவே!
கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய யூதா ததேயுவின் மன்றாட்டுமாலை

ஆண்டவரே இரக்கமாயிரும். (2)
கிறிஸ்துவே இரக்கமாயிரும். (2)
ஆண்டவரே இரக்கமாயிரும். (2)
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை கேட்டருளும். (2)
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாக கேட்டருளும். (2)

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவாகிய சர்வேசுரா!
*எங்கள் மேல் இரக்கமாயிரும்.*
உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சர்வேசுரா!
*எங்கள் மேல் இரக்கமாயிரும்.*
பரிசுத்த ஆவியாகிய சர்வேசுரா!
*எங்கள் மேல் இரக்கமாயிரும்.*
அதி பரிசுத்த திரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா!
*எங்கள் மேல் இரக்கமாயிரும்.*
தூய மரியாயே!
*** எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**
யேசு மரி சூசையின் நெருங்கிய சுற்றத்தவரான தூய யூதா ததேயுவே!
*** எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுவையும் மரியாவையும் இவ்வுலகிற் கண்டு களிக்கப் பாக்கியம் பெற்ற தூய யூதா ததேயுவே!*

திருத்தூதர் எனும் உயர் பதவிக்கு உயர்த்தப் பட்ட தூய யூதா ததேயுவே! *

தேவகுரு உமது பாதங்களைக் கழுவத் தம்மை தாழ்த்திக் கொண்டதினால் மகிமை அடைந்த தூய யூதா ததேயுவே! *

கடைசி இராப்போசனத்தில் திவ்விய யேசுவின் திருக்கரங்களினால் நற்கருணையைப் பெறப் பாக்கியம் பெற்ற தூய யூதா ததேயுவே! *

உமது அன்பான எஜமானின் மரணத்தினால் அடைந்த மிகுந்த வியாகுலம், அவருடைய மகிமை யான உத்தானத்தினாலும் மோட்ச ஆரோகணத்தினாலும் நீங்கப் பெற்ற தூய யூதா ததேயுவே! *

தூய ஆவியானவர் திருத்தூதர் மேல் இறங்கிய போது அவருடைய சகல வரப்பிரசாதங் களாலும் நிறையப் பெற்ற தூய யூதா ததேயுவே! *

பார்சீய தேசத்தில் நற்செய்தியைப் போதித்த தூய யூதா ததேயுவே! *

* எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகரை மனந்திருப்பிச் சத்திய மறையில்
சேர்த்த தூய யூதா ததேயுவே! *
தூய ஆவியானவரின் வல்லபத்தினால் அனேக
அதிசயமான அற்புதங்களைச் செய்த
தூய யூதா ததேயுவே! *
அஞ்ஞானத்தில் அமிழ்ந்திருந்த ஓர் அரசனின்
ஆத்துமத்திற்கும் சரீரத்திற்கும்
ஆரோக்கியம் கொடுத்த தூய யூதா
ததேயுவே! *
சாத்தானின் வாயை அடக்கி அவைகளைத்
திகிலுறச் செய்த தூய யூதா ததேயுவே! *
வல்லபம் மிக்க அரசனின் மானத்திற்குப் பங்க
மின்றி சமாதான உடன்படிக்கை செய்து
கொள்வான் எனச் சிற்றரசனுக்கு இறை
வாக்கு உரைத்த தூய யூதா ததேயுவே!*
கொடிய அரவங்களால் மனிதர் பாதிக்கப்படாதபடி
அவற்றின் விஷத்தை அகற்றிய
தூய யூதா ததேயுவே! *
தேவ பயமற்றவர்களின் மிரட்டல்களைச் சட்டை
பண்ணாது வீரத்துடன் கிறிஸ்துவின்
போதனையைப் போதித்த
தூய யூதா ததேயுவே! *
உமது பரிசுத்த எஜமானுடைய மறைசாட்சியாக
விருப்புடன் உயிரைக் கொடுத்த
தூய யூதா ததேயுவே! *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிடப்பட்ட நிலையினருக்குப் பாதுகாவலரான
தூய யூதா ததேயுவே! *
எங்கள் அவசரங்களில் எங்களுக்கு உதவி புரியும்
தூய யூதா ததேயுவே! *
* எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உம்முடைய சிபார்சினால் குருக்களுக்கும் கிறிஸ் தவர்களுக்கும் திடமானவிசுவாசத்தை அடைந்து தந்தருளும்படி உம்மை மன்றாடுகின்றோம்.

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

பரிசுத்த பாப்பானவரைப் பாதுகாக்கவும், திருச்சபை யில் சமாதானமும், ஒருமைப்பாடும் நிலைக்கவும் மன்றாடும்படி உம்மைமன்றாடுகின்றோம். *

சகல அஞ்ஞானிகளும் அவவிசுவாசிகளும் சத்திய திருச்சபையிற் சேர உதவி செய்யும்படி உம்மை மன்றாடுகின்றோம். *

எங்கள் இதயங்களிலே விசுவாசம், நம்பிக்கை, தேவசினேகம் அதிகரிக்கச் செய்ய வேண்டு மென்று உம்மை மன்றாடுகின்றோம். *

உம்மை மகிமைப்படுத்துகின்றவர்களுக்கு உதவி செய்யவும், அவர்களை காப்பாற்றவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல பாவங்களிலிருந்தும், பாவச் சமயங்களி
லிருந்தும், எங்களைக் காப்பாற்ற வேண்டு
மென்று உம்மை மன்றாடுகின்றோம். *

மரண நேரத்தில், சாத்தானின் தாக்குதல்களி
லிருந்தும், கெட்ட அரூபிகளினின்றும்
எங்களைக் காக்கவேண்டுமென்று
உம்மை மன்றாடுகின்றோம். *

உலகத்தின் பாவங்களைப் போக்குகின்ற இறைவனின்
செம்மறிப் புருவையாகிய யேசுவே!
*எங்கள் பாவங்களை போக்கியருளும் சுவாமி.*

உலகத்தின் பாவங்களைப் போக்குகின்ற இறைவனின்
செம்மறிப் புருவையாகிய யேசுவே!
*எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும் சுவாமி*

உலகத்தின் பாவங்களைப் போக்குகின்ற இறைவனின்
செம்மறிப் புருவையாகிய யேசுவே!
*எங்களைத் தயவுபண்ணி இரட்சித்தருளும் சுவாமி.*

முத.: யேசுகிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு
நாங்கள் பாத்திரவான்களாய் இருக்கத்
தக்கதாக.

எல்.: *தூய யூதா ததேயுவே*
*எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபிப்போமாக, எங்கள் ஆண்டவரான இயேசுக் கிறிஸ்துவே! உமது உறவினரும், நேசரும், தாசருமான தூய யூதா ததேயு திருத்தூதரே, உமது நேசத் திற்காகத் தமது சீவியத்தை அஞ்ஞானிகளி டையே செலவளித்துக் கடைசியாய் விசுவாசத்திற்குச் சாட்சியாய்த் தமது உயிரைக் கொடுத்தாரே. நாங்களும் அவரைக் கண்டு பாவித்துப் புண்ணியத்திலே முன்னேறி உமது நேசத்திற்காக எங்கள் உயிரையும் தியாகம் செய்ய அருளும்படி வேண்டுகின்றோம், ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. புனித யுதா ததேயுவை நோக்கிப் பாடல்

ஐயா உன் பாதம் தேடி வருகிறோம் - இன்று
ஆனந்தம் பொங்கப் பாடல் பாடுறோம்
அருள் கேட்டு ஓடி வந்த எங்களின் 2 - கைகள்
நிறைய அருள் பெற்று எமக்குத் தந்திடு

I

எங்கள் மண்ணில் கோயில் கொண்ட புனிதனே
உந்தன் சந்நிதியில் கூடி வந்தோம் பாடிட 2
பரவி நின்று வேண்டுகின்ற எங்களின் - 2 ஆன்ம
வாழ்வு செழித்து ஓங்க நாளும் வேண்டிடு

II

அரியாலை உந்தன் திருத் தலமன்றோ - உம்மை
அண்டி வந்தோர் நிறைவடையும் இடமன்றோ 2
கருணை மழை பொழிந்து எம்மைக் காத்திடு - 2
நித்தம்
உந்தன் பெயர் பாடும் இந்த மண்ணிது

III

உன்னுயிரைத் துச்சமென்று ணார்ந்தாயோ - மனிதர்
யேசுவிடம் நாடப் பலியானாயோ 2
யேசுவே உலகின் மீட்பர் என்றாயோ - 2 அந்த
யேசுவைப் பின் செல்ல அருள் தாராயோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கருணை பொங்கும் காவலரே

கருணை பொங்கும் காவலரே
கைவிடப்பட்டோரின் ஆதரவே
காயங்கள் ஆற்றும் அற்புதரே - எங்கள்
அன்பரே யூதா ததேயுவே

I

பாவம் நெஞ்சில் படியாமல்
பரமன் அன்பை மறவாமல் - 2
நோயும் பிணியும் அணுகாமல் - வாழ
நாதனே உனதருள் தாருமே

II

விண்ணகம் தன்னில் வீற்றிருந்து
விண்ணக ஆசி பொழிவாயா 2
ஞான வடிவே அருள் புனலே - விண்
நலன்கள் சேர அருள்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ३. அரியாலைப் பதிவாழும்

அரியாலைப் பதி வாழும் அருளாளா யூதா
அடியோரின் குறை போக்கும் கருணைசேர் நாதா
பரன் யேசு வழி தேடி நாம் வாழ நாளும்
வரம் கோடி தர வேண்டி இணைந்திங்கு வந்தோம்.

இருள் சூழப் புவிமீது தவிக்கின்ற வேளை
கடல்கூடப் புயலாகி அழிக்கின்றதையா
கொடும் பாவ வினையாலே வருகின்ற சோகம்
என நாங்கள் உணர்கின்ற வரம் தாரும் ஐயா.

தளர்வோடு அலைகின்ற மனிதர்கள் இங்கே
உயர்வான வழிகாண ஒளி காட்டும் ஐயா
இறைநாமம் நிதம் பாடி விசுவாச வாழ்வில்
நிறைவாக அவர் வாழ அருள்வீரே ஐயா

இறையேசு வழி நாளும் நடந்தீரே ஐயா
முறையோடு அதுபோல புவியோடு என்றும்
கறைபோக்கி அன்போடும் பரிவோடும் வாழ
குறையாத வளம் தாரும் இறையன்பின் தூதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூதா எழுதிய திருமுகம்

### முன்னுரை

### 1. வாழ்த்து

[1]தந்தையாம் கடவுளால் அழைக்கப்பெற்று அவரது அன்பிலும் இயேசுக் கிறிஸ்துவின் பாதுகாப்பிலும் வாழ்வோருக்கு, இயேசுக் கிறிஸ்துவின் பணியாளனும் யாக்கோபின் சகோதரனுமாகிய யூதா எழுதுவது:

[2]இரக்கமும் அமைதியும் அன்பும் உங்களில் பெருகுக!

### 2. போலிப் போதகர்கள்

[3]அன்பார்ந்தவர்களே, நம்மெல்லாருக்கும் கிடைத்துள்ள பொதுவான மீட்பைக்குறித்து உங்களுக்கு நான் எழுத மிகவும் ஆர்வமாய் இருந்தேன். ஆனால் எல்லாக் காலத்துக்குமென இறைமக்களிடம் ஒப்படைக்கப்பட்ட விசுவாசத்துக்காகப் போராடும்படி உங்களை ஊக்குவிக்க இதை எழுதும் தேவை ஏற்பட்டுள்ளது [4]ஏனெனில், திருட்டுத் தனமாகச் சிலர் உங்களிடையே புகுந்துள்ளனர். இவர்கள் தண்டனைக்குள்ளாக வேண்டுமென்று முன்னரே எழுதப்பட்டுள்ளது. இறைப்பற்றிலாத இவர்கள் நம்முடைய கடவுளின் அருளைத் தங்கள் காம வெறிக்கு ஏற்பத் திரித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறார்கள். நம் ஒரே தலைவரும் ஆண்டவரு
மாகிய இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கின்றார்கள்.
[5]நீங்கள் எல்லாவற்றையும் அறிந்திருக்
கிறீர்கள். ஆயினும் சிலவற்றை உங்களுக்கு
நினைவுறுத்த விரும்புகிறேன். ஆண்டவர் எகிப்து
நாட்டிலிருந்து மக்களை ஒரே முறையாக
விடுவித்தாரெனினும், தம்மை நம்பாதவர்களைப்
பின்னர் அழித்து விட்டார். [6]சில வானதூதர்கள்
தங்கள் ஆளும் அதிகாரத்தைக் காத்துக்
கொள்ளாமல், தங்கள் உறைவிடத்தை துறந்து
விட்டார்கள். என்றும் கட்டப்பட்டவர்களாய்
அவர்களைக் கடவுள் மாபெரும் தீர்ப்பு நாளுக்
காகக் காரிருளில் வைத்திருக்கிறார். [7]அவர்களைப்
போலவே, சோதோம், கொமோரா அவற்றின்
சுற்றுப்புற நகரங்கள் ஆகியவற்றின் மக்கள்
பரத்தைமையிலும் இயற்கைக்கு மாறான
சிற்றின்பத்திலும் மூழ்கியிருந்தார்க்ள. ஆகவே
அவர்கள் என்றும் அணையாத நெருப்பில்
தண்டிக்கப்பட்டார்கள். அவர்கள் நமக்கொரு
பாடமாய் உள்ளார்கள். [8]இருப்பினும், இப்பொய்க்
காட்சியாளர்களும் அவ்வாறே உடலை மாசுபடுத்து
கிறார்கள். அதிகாரத்தைப் புறக்கணிக்கிறார்கள்.
மாட்சிமிகு வானவரைப் பழித்துரைக்கிறார்கள்.
[9]தலைமைத் தூதரான மிக்கேல், மோசேயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலைக் குறித்து அலகையோடு வழக்காடிய போது அதனைப் பழித்துரைத்துக் கண்டனம் செய்யத் துணிய வில்லை. மாறாக, "ஆண்டவர் உன்னைக் கடிந்து கொள்வாராக" என்று மட்டும் சொன்னார். [10]ஆனால் இவர்கள் தங்களுக்குத் தெரியாதவற்றையும் பழிக்கிறார்கள். பகுத்தறி வில்லாத விலங்குகளைப் போல் இயல் புணர்ச்சியினால் இவர்கள் அறிந்திருப்பதும் இவர்களுக்கு அழிவையே விளைவிக்கும். [11]இவர்களுக்கு கேடு விளைக! ஏனெனில் இவர்கள் காயின் சென்ற வழியில் சென்றார்கள். கூலிக்காகப் பிலயாமின் தவற்றைத் துணிந்து செய்தார்கள். கோராகைப் போல எதிர்த்து நின்று அழிந்தார்கள். [12]இவர்கள் அச்சமின்றி உங்கள் அன்பின் விருந்துகளில் கூடி உண்டு அவற்றைக் கறைப்படுத்துகிறார்கள். இவர்கள் தங்கள் நலனில் மட்டுமே கருத்தாய் இருப்பவர்கள். காற்றால் அடித்துச் செல்லப்படும் நீரற்ற மேகங்கள். கனிதரும் காலத்தில் கனி தராமல், பின்னர் வேரோடு பிடுங்கப்படும் மரங்களைப் போல இருமுறை செத்தவர்கள். [13]தங்களுடைய வெட்கக் கேடுகளை நுரையாகத் தள்ளுகின்ற கொந்தளிக்கும் கடல் அலைகள் வழிதவறித் திரியும் விண்மீன்கள். என்றென்றும் உள்ள காரிருளே இவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14-15 ஆதாமுக்குப் பின் ஏழாந்தலை முறையான ஏனோக்கு இவர்களைக் குறித்து, "இதோ ஆண்டவர் எல்லாருக்கும் தீர்ப்பளிக்கத் தம் பல்லாயிரக் கணக்கான தூயவர்களோடு வந்து விட்டார். இறைப் பற்றில்லாதவர்கள் செய்த அனைத்துச் தீயசெயல்களுக்காகவும், இறைப் பற்றில்லாத பாவிகள் பேசிய அனைத்துக் கடுஞ் சொற்களுக்காகவும் தண்டனை வழங்குவார்" என்று முன்னுரைத்துள்ளார். [16]இவர்கள் எப்போதும் முணுமுணுப்பவர்கள். குறைகூறுபவர்கள், தங்கள் தீய நாட்டங்களின்படி வாழ்பவர்கள், வரம்பு மீறிப் பெருமை பேசுபவர்கள், தங்கள் நலனுக்காகப் பிறரைப் போலியாகப் புகழ்பவர்கள்.

3. விசுவாசத்தைக் காக்குமாறு எச்சரிக்கையும் அறிவுரையும்.

[17]அன்பார்ந்தவர்களே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருத்தூதர்கள் முன்னு ரைத்த வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள். [18]ஏனெனில், "இறைப்பற்றில்லாமல் தமது தீய நாட்டங்களின்படி வாழ்ந்து ஏளனம் செய்வோர் இறுதிக்காலத்தில் தோன்றுவர்" என்று அவர்கள் உங்களுக்குச் சொன்னார்கள். [19]இவர்கள் பிரிவினை உண்டு பண்ணுபவர்கள். மனித இயல்பின் படி நடப்பவர்கள். கடவுளின் ஆவியைக் கொண்டிராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள். [20]அன்பானவர்களே, தூய்மை மிகு விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு உங்கள் வாழ்வைக் கட்டி எழுப்புங்கள். தூய ஆவியின் துணையுடன் வேண்டுதல் செய்யுங்கள். [21]கடவுளது அன்பில் நிலைத்திருங்கள். என்றுமுள்ள நிலை வாழ்வைப் பெற நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வின் இரக்கத்தை எதிர்பாத்திருங்கள். [22]நம்பத் தயங்குவோர்க்கு இரக்கம் காட்டுங்கள். [23]வேறு சிலரை அழிவுத் தீயிலிருந்து பிடித்திழுத்துக் காப்பாற்றுங்கள். மற்றும் சிலருக்கு இரக்கம் காட்டும்போது எச்சரிக்கையாய் இருங்கள். ஊனியல்பால் கறைப்பட்ட அவர்களது ஆடையை யும் வெறுத்துத் தள்ளுங்கள்.

## 4. முடிவுரை
## இறையாசி

24-25 வழுவாதபடி உங்களைக் காக்கவும் தமது மாட்சித் திருமுன் மகிழ்ச்சியோடு உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்ல நம் மீட்பராகிய ஒரே கடவுளுக்கு, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய், மாட்சியும் மாண்பும் ஆற்றலும் ஆட்சியும் ஊழிக் காலந்தொட்டு இன்றும் என்றென்றும் உரியன. ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சேற்றலாம் :

அருட்திரு. ஜே. நீக்கிலஸ்
குருமுதல்வர்
12.12.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலைன்மேசி(அன்னை), குருநகர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org